


இரண்டாயிரமாவது ஆண்டுக்குப் பிறகு, ஜமா இஸ்லாமியா முன்னின்று நடத்திய அல்லது ஒத்துழைப்புக் கொடுத்த பல தாக்குதல் திட்டங்களை உற்று நோக்கினால், ஒரு பொதுவான அம்சம் புலப்படும். பெரும்பாலும் அவர்களுடைய இலக்கு அமெரிக்கப் பொருளாதாரத்தைச் சீண்டிப் பார்ப்பதாகவோ, அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்துக்குத் தலைவலி தரத்தக்கதாகவோதான் இருந்து வந்திருக்கின்றது. அப்படி இல்லாமல், லோக்கல் இந்தோனேஷிய அரசை மட்டுமே பாதிக்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், ஏதோ ஒரு வகையில் அவர்கள் அமெரிக்காவுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை உள்ளடக்கிய வகையிலேயே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

அல் காயிதாவைப் போல ஜமா இஸ்லாமியாவுக்கு நேரடியான அமெரிக்க விரோத மனப்பான்மை கிடையாது. அதற்கான அவசியமும் ஏற்பட்டதில்லை. பின்லேடனுக்காவது, தன் தாய்நாட்டுக்குள் அமெரிக்கப் படைகள் வந்து உட்கார்ந்து கொண்டு அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருந்த கோபம் இருந்தது. ஆப்கன் யுத்தத்தின் வெற்றியை, அமெரிக்கா தன்னுடைய சொந்த வெற்றியாக அறிவித்துக் கொண்ட வெறுப்பு இருந்தது. பாலஸ்தீன் விஷயத்தில் இஸ்ரேலைத் தொடர்ந்து தூண்டி விட்டுக் கொண்டிருந்த ஆத்திரம் இருந்தது.

ஜமா இஸ்லாமியாவுக்கு அப்படியெல்லாம் பிரத்தியேகக் காரணங்கள் ஏதும் கிடையாது. பஷீரும் சரி, அவரது சிநேகிதர் சுங்கரும் சரி. ஜமாவைத் தொடங்கி வைத்து கொள்கை விளக்கம் அளித்தபோது, செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக, அமெரிக்க இலக்குகள் எதையும் குறிப்பிட்டதில்லை. பின்னால் வந்து இணைந்து தளபதியான ஹம்பாலிக்கும் அமெரிக்கா மீது கசப்பு ஏற்படத் தனிக் காரணங்கள் ஏதும் கிடையாது.

ஆரம்பத்தில் இந்தோனேஷியாவுக்குள் மட்டும் இயங்க முடிவு செய்து, கொஞ்சம் கொஞ்சம் பிற கிழக்காசிய நாடுகளிலும் மூக்கை நீட்டத் தொடங்கிய ஜமா இஸ்லாமியாவுக்கு, அமெரிக்க விரோத எண்ணம் ஏற்படக் காரணமாக இருந்த நபர், காலீத் ஷேக் முஹம்மது.

வேறு வழியே இல்லை. இந்த இடத்தில் நாம் மீண்டும் அண்ணன் காலீதை கவனித்துத்தான் ஆகவேண்டும். அடிக்கடி இந்தத் தொடரில் வந்து போகிறார் அல்லவா? அவருடைய இயல்பு அப்படி. இப்போது அமெரிக்கச் சிறையில் கம்பி அல்லது கட்டம் எண்ணிக் கொண்டிருக்கும் காலீத் ஷேக் முஹம்மது, அநேகமாக இந்தத் தொடரில் வரக்கூடிய பெரும்பாலான இயக்கங்களுக்குள் சர்வ சாதாரணமாக வந்து போவார் பாருங்கள்.

ஒரு தனி நபராகவும் சுதந்திரத் தீவிரவாதியாகவும், அதே சமயம் எந்த இயக்கத்துடனும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொருந்தி செயல்படக்கூடிய தன்மை கொண்டவராகவும் காலீத் இருந்திருக்கிறார். அவரது விசேஷமும் இதுதான்; பிரச்னையும் இதுதான்.

காலீத் ஷேக் முஹம்மது எதற்காக ஜமா இஸ்லாமியாவுக்கு அமெரிக்க விரோத மனப்பான்மையை

ஊட்ட வேண்டும்? அல்லது புகட்ட வேண்டும்?

இது கேள்வி. நல்ல கேள்விதான். ஆனால், இதற்கு நேரடி பதில் கிடையாது. காலீத் ஷேக், ஒரு கார்ப்பொரேட் மனோபாவம் கொண்ட தீவிரவாதி. தீவிரவாதத்தை ஒரு கார்ப்பொரேட் மாதிரி நடத்த விரும்பியவர். உயர் தொழில் நுட்பம், உலகமெங்கும் நெட் ஒர்க், மிகப்பெரிய டார்கெட், வலுவான போட்டியாளர், அட்டகாசமான தாக்குதல் உத்திகள் என்று அவரது திட்டங்கள் அனைத்தும் கோட் சூட் அணிந்தவை.

மேலோட்டமான பார்வைக்கு இது வினோதமாக, சிரிப்பூட்டக் கூடியதாகத் தோன்றலாம். உண்மை அப்படியல்ல. ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். கோகோ-கோலா கம்பெனியின் வளர்ச்சி குறித்து யார் அதிகம் கவலைப்படுவார்கள்?

கோகோ-கோலாவின் சேர்மன் என்று உடனடியாக பதில் சொல்வீர்களானால், உங்களுக்கு சைபர் மார்க். பெப்சியின் ஆட்கள் என்பீர்களானால் நீங்கள் கரெக்ட்.

தீவிரவாத இயக்கங்களைப் பொறுத்தவரை, அவர்களது வளர்ச்சி குறித்தும் செயல்பாடுகள் குறித்தும் அவர்களைக் காட்டிலும் அதிகம் கவலை கொண்டு, அக்கறையுடன் கவனித்தது அமெரிக்கா. தன்னுடைய சௌகரியத்துக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு இயக்கங்களை ஊக்குவித்து வளர்த்ததும் அதே அமெரிக்காதான். பின்னாளில் தான் வளர்த்துவிட்ட அதே இயக்கங்களை ஒழிப்பதிலும், அதே தீவிரத்துடன் அமெரிக்கா செயல்படத் தொடங்கியபோதுதான், காலீத் ஷேக் போன்ற மாஸ்டர் தீவிரவாதிகளுக்குக் கடுப்பாகிப் போனது.

காலீத் ஷேக், அல் காயிதா ஆள் அல்ல. ஆனால், அவர் அல் காயிதாவுக்காக வேலை பார்த்திருக்கிறார். அவர் ஜமா இஸ்லாமியாவின் ஆள் அல்ல. ஆனால், ஜமாவுக்காகவும் உழைத்திருக்கிறார். அபூ சயீப் குழு, பாலஸ்தீனியக் குழுக்கள், சவூதி அரேபிய, இராக் குழுக்கள், செர்பிய தீவிரவாத இயக்கங்கள் பலவற்றுடன் பல்வேறு காலகட்டங்களில் அவர் தொடர்பு வைத்துக் கொண்டிருந்திருக்கிறார். அசைன்மெண்ட் அடிப்படையில் அவர்களுக்கெல்லாமும் கூடப் பல காரியங்கள் செய்து கொடுத்திருக்கிறார். அவர் ஒரு ஃப்ரீலான்ஸ் தீவிரவாதி. ஆனால், விஷயமுள்ள ஆள். ஒரு காரியத்தை நம்பி ஒப்படைத்தால், எப்பாடு பட்டாவது முடித்தே தீருவார். செப்டம்பர் 11 சம்பவம் ஒன்று போதாது?

அப்படிப்பட்ட நபர், செப்டம்பர் 11 சம்பவம் தொடர்பாக கிழக்காசிய நாடுகளில் சில முன்னேற்பாடுகள் செய்வதன் பொருட்டு, ஜமா இஸ்லாமியாவைத் தொடர்பு கொண்டபோதுதான் முதன்முதலில் இந்த அமெரிக்க எதிர்ப்புணர்வு என்கிற விதையை அங்கே போட்டு வைத்தார்.

காலீத் ஷேக்கைப் பொறுத்தவரை, போராளி இயக்கங்களின் செயல்பாடுகள் என்னதான் முஸ்லிம் சமூகத்தினரின் நன்மைக்காக என்று சொன்னாலும், அதில் கொஞ்சம் ஸ்டண்ட் கலந்திருக்க வேண்டும் என்பதுதான் அவரது பிரத்தியேக விருப்பம். ஒசாமாவிடம் அவருக்குப் பிடிக்காத விஷயமே இதுதான். எல்லாவற்றையும் ஏன் ரகசியமாக மூடி மூடிச் செய்யவேண்டும்? செய்து முடித்த பிறகும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருப்பது ஏன்? சந்தோஷப் பரவசத்துடன் மைக் பிடித்து முழங்க வேண்டாமா?

அமெரிக்காவை எதிர்க்கிறோம் என்றால், அதை பகிரங்கமாகச் சொன்னால்தானே அமெரிக்க எதிர்ப்பாளர்கள் அத்தனை பேரின் ஆதரவும் கிடைக்கும்? தவிரவும் எந்த ஒரு தேசத்தின் அரசும் அமெரிக்காவுடன் மோத பயப்படும் என்கிற நிலையில், தீவிரவாத இயக்கங்கள் முழுமூச்சுடன் அமெரிக்க எதிர்ப்பில் இறங்குவது மக்கள் ஆதரவைத் திரட்ட மாபெரும் உபாயமாகுமல்லவா?

அதுமட்டுமல்லாமல், முஸ்லிம் விரோத அமெரிக்க அரசை எதிர்ப்பதை பகிரங்கமாகக் காட்டிக்

கொண்டால் இரண்டு லாபங்கள் நிச்சயம். ஒன்று, ஒட்டுமொத்த உலக முஸ்லிம்களும் அள்ளிக் கொடுத்து ஆதரிப்பார்கள். இரண்டாவது, எதிரி பலம் பொருந்தியவனாக இருப்பது நம் அந்தஸ்தை அதிகரிக்கும். சட்டென்று ஒரு கவனம் கிடைக்கும். நாம் யார் என்பதைக் காட்டிலும் நம் எதிரி யார் என்று தெரிந்தால், இன்னும் சுவாரசியமாகக் கவனிப்பார்கள். அது பொருத்தமான எதிரியாகவே இருந்து விடுகிற பட்சத்தில், நமது செயல்பாடுகளுக்கு ஒரு நியாயம் தானாகவே வந்து சேரும்.

இதைத்தான் பல்வேறு விதங்களில் ஹம்பாலிக்குத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்தார் காலீத் ஷேக் முஹம்மது. அமெரிக்க எதிர்ப்புணர்வு வெளிப்படையாகத் தெரியும்படி காரியங்களை அமைத்துக் கொண்டால் அல் காயிதாவின் நிதி உதவியும் அதிகரிக்க வாய்ப்புண்டு என்பது, அவர் மறைமுகமாகத் தெரிவித்த செய்தி.

ஒரு விஷயம். காலீத் ஷேக் புரோக்கர் அல்ல. நிச்சயமாக அல்ல. அவரது தீவிரவாத மனோபாவமும் சரி, அமெரிக்க எதிர்ப்புணர்வும் சரி, லாப நோக்கற்றது. குவைத்தில் பரம சௌக்கியமாக வாழக் கிடைத்த வாழ்க்கையை உதறிவிட்டு, பெற்றோரையும் மனைவி மக்களையும் அம்போவென்று விட்டுவிட்டு, ஆப்கனிஸ்தான் காடுகளிலும், இந்தோனேஷிய ரகசிய இடங்களிலும், செர்பியக் காட்டிலும் சுற்றிக் கொண்டிருந்தவர் அவர். அல் காயிதாவில் இணைந்துவிடும்படி எத்தனையோ முறை ஒசாமா பின்லேடன் அழைப்பு விடுத்தும், சேராமல் 'வெளியிலிருந்து ஆதரவு' மட்டுமே தரமுடியும் என்று ஒற்றைக் காலில் நின்றவர் அவர். என்ன, கொஞ்சம் புகழ் பிடிக்கும். செய்து முடித்த காரியத்துக்கு உரிய அங்கீகாரம் வேண்டுமென்று எதிர்பார்ப்பவர்.

விமானங்களைக் கடத்தி மோதிய சம்பவத்தின்போதே, அவர் முதலில் வைத்த யோசனையின் இறுதிக்கட்டம் இதனடிப்படையில் அமைந்ததுதான். கடைசியாகக் கடத்தப்படும் விமானத்தில் தானே ஏறி ஒரு பிரசங்கம் செய்து விட்டு, அமெரிக்காவுக்கு எச்சரிக்கை கொடுத்துவிட்டு, கூண்டோடு வெடித்து இறந்து போவதாகத்தான் அவரது ஒரிஜினல் ப்ளூ ப்ரிண்ட் இருந்தது. ஒசாமாதான் அதனை நிராகரித்து விட்டார். தன் உயிரைக் கொடுத்தாவது அமெரிக்காவுக்கு ஒரு பகிரங்க எச்சரிக்கை அளிக்கலாம் என்பதே காலீத் ஷேக்கின் சித்தாந்தம். ஒசாமா, 'அமெரிக்காவுக்கு எச்சரிக்கை வேறு விதமாகக் கொடுத்துக் கொள்ளலாம், இப்போதைக்கு உன் உயிர் இருந்துவிட்டுப் போகட்டும்' என்று சொல்லி விட்டதால் தப்பித்தார்.

அது இருக்கட்டும். இந்த காலீத் ஷேக் முஹம்மது எந்த வகையில் ஜமா இஸ்லாமியாவுக்கு முக்கியமாகிப் போனார்? எப்படி அவரால் அமெரிக்க எதிர்ப்பு என்கிற தீவிர உணர்வை அத்தனை அநாயாசமாக அந்த இயக்கத்துக்குள் வேரூன்ற வைக்க முடிந்தது? சரி, அவர்தான் சொல்கிறார் என்றால், ஏன் ஜமா அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்? அதனால் என்ன லாபம் அவர்களுக்கு?

ஒரே லாபம்தான். கிழக்காசியாவின் நிகரற்ற பெரும் இயக்கமாக ஜமா இஸ்லாமியா உருவானதற்கு, அல் காயிதாவின் தொடர்பும் நட்பும் பொருளுதவிகளும் தடையற்றுக் கிடைக்கத் தொடங்கியது.

தனக்கான லாபம் இதில் என்னவென்று காலீத் ஷேக் பார்க்கவில்லை. ஜமா இஸ்லாமியா போன்ற இயக்கங்களின் வளர்ச்சி, இந்தக் காலகட்டத்துக்கு அத்தியாவசியம் என்று அவர் நினைத்தார். அதற்குத் தன்னாலான ஒரு 'திருப்பணி'யாகத்தான் அவர் இதனைச் செய்தார்.

செப்டம்பர் 11 சம்பவத்துக்கான தயாரிப்புப் பணிகளில், அல் காயிதா தீவிரமாக மூழ்கியிருந்தபோது, சம்பந்தப்பட்ட கடத்தல்காரர்களுக்கு விமானம் குறித்த அடிப்படைப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவும் வேறு சில சிறப்புப் பயிற்சிகளுக்காகவும் கிழக்காசியாவுக்கு அனுப்பி வைக்க அல் காயிதா மேலிடம் விரும்பியது. ஆப்கனிஸ்தானில் உட்கார்ந்து கொண்டு விமானமல்ல; விமான பொம்மையைக் கூடப் பார்க்க முடியாது என்பதுதான் காரணம்.

தவிரவும் அமெரிக்காவில் நிகழ்த்த உத்தேசிக்கப்பட்டிருந்த ஒரு காரியத்துக்கு, அதற்குச் சற்றும் சம்பந்தமில்லாத இன்னொரு மூலையில் பயிற்சியளிப்பதுதான் சரி என்றும் நினைத்திருக்கலாம். பெரும்பாலான கிழக்காசிய நாடுகள் அமெரிக்காவுடன் கொண்டிருந்த நல்லுறவுகளும் இன்னொரு காரணம். எந்த வகையிலாவது அந்த உறவுக்கும் ஒரு வேட்டு வைக்க வாய்ப்புக் கிடைத்தால் கசக்குமா என்ன?

ஒசாமா பின்லேடனும் முஹம்மது அடீஃபும் இப்படி யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், காலீத் ஷேக் முஹம்மது ஜமா இஸ்லாமியாவின் இருப்பை ஞாபகப்படுத்தி, அவர்கள் மூலம் இந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று யோசனை தெரிவித்தார்.

யோசனை ஒப்புக் கொள்ளப்பட்டதும், முதலில் காலீத் இந்தோனேஷியாவுக்குப் போனார். அங்கே ஹம்பாலியைச் சந்தித்துப் பேசி விஷயத்தை விளக்கினார். 'இதோ பார், நான் சில பையன்களை அழைத்து வரப்போகிறேன். அவர்கள் மிகப்பெரிய காரியம் ஒன்றுக்காகப் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள். அவர்களுக்கு இங்கே உன்னால் சில காரியங்கள் ஆக வேண்டியிருக்கிறது. மிஞ்சிப் போனால், இந்தப் பக்கம் ஒரு மாதகாலம் சுற்றிக் கொண்டிருப்பார்கள். கழுதை கெட்டால் மலேசியா, சிங்கப்பூர், பாங்காக் அல்லது ஜகார்த்தா. அவர்கள் போகிற இடங்களிலெல்லாம் நீதான் பாதுகாப்பாக அழைத்துப்போக வேண்டும். அவர்களுக்கு வேண்டிய சுக சௌகரியங்களைச் செய்து தரவேண்டும். உனக்குத் தெரிந்த வித்தைகளையும் சேர்த்துச் சொல்லிக் கொடுப்பாயானால், உனக்கு மங்களம் உண்டாகட்டும். காரியம் நல்லபடியாக முடிந்தால் சரித்திரம், பூகோளம் எல்லாவற்றிலும் நம் பெயர் எழுதப்படும்.'

பார்த்துப் பார்த்து எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, அவர் கராச்சிக்குப் போய் உட்கார்ந்து கொண்டார். ஆப்கனிஸ்தானிலிருந்து பயிற்சி முடித்துத் திரும்பி வந்த விமானக் கடத்தல்காரர்களை, பேட்ச் பேட்சாக அங்கிருந்து அவர் பாங்காக்குக்கும் மலேசியாவுக்கும் அனுப்ப ஆரம்பித்தார். அவரவர் நல்ல பெயர், கெட்ட பெயருக்கேற்பக் கிடைத்த விசா வசதிகளைப் பயன்படுத்தி, தலையைச் சுற்றி இந்தோனேஷியாவுக்கு அனுப்பி வைத்தார்.

ஜமா இஸ்லாமியா முதன்முதலாக அல் காயிதா குழுவினருடன் இணைந்து பணியாற்ற வேண்டிய சந்தர்ப்பம், அப்போது ஏற்பட்டது.

பக்கத்தில் இருந்து, காலீத் ஷேக் பார்த்துக் கொண்டார். தூர இருந்து ஒசாமா பின்லேடனும் கவனித்தார். இந்தப் பன்னாட்டு கொலாபரேஷனை கவனிக்க மறந்த ஒரே பிரகஸ்பதி, இந்தோனேஷிய உளவுத்துறை.

அதற்கான விலையையும் அவர்கள் கொடுக்க வேண்டியிருந்தது.